*3*

# பழைய ஏற்பாட்டில் பெண்கள்

*சிருஷ்டிப்பின் காலத்தில் இருந்து சபையின் தொடக்க நாட்கள் வரை, வேதவசனங்கள் தேவனுடைய திட்டத்தில் பெண்களின் பணிப் பொறுப்பை விளக்கி விவரிக்கின்றன. தேவனுடைய வசனத்தில் நமக்கு அளிக்கப்பட்டுள்ள உதாரணங்கள், பெண்கள் தங்களின் வீட்டாரிடத்திலும், தங்களின் சமூகங்களிலும், மற்றும் தங்களின் நாடுகளிலும் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ செலுத்திய மாபெரும் செல்வாக்கைக் காண்பிக்கின்றன.*

## ஏதேன் தோட்டத்தில் பெண்

ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் பாவம் செய்து வீழ்ந்த சூழலைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், தேவன் தமது படைப்பிற்கு நோக்கங் கொண்டிருந்த நடத்துவத்துவப் பணிப்பொறுப்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

**சாத்தானால் சோதனை**

தேவன் ஆணிடம் நேரடியாகப்பேசி, "... நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கூறினார் (ஆதியாகமம் 2:16, 17). பிந்திய வேளையொன்றில் தேவன் ஏவாளிடம் நேரடியாகவே இந்தத் தடையைப் பற்றிப் பேசியிருக்கலாம், அல்லது - பெரும்பாலும் - ஏவாளைத் தேவன் ஆதாமினிடம் கொண்டு வந்தபோது, இந்தச் செய்தி ஆதாமினால் ஏவாளுக்குக் கூறப்பட்டிருக்கலாம். ஏவாள் சர்ப்பத்தைப் பார்த்து, "... நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப்புசிக்கவும் அதைத்தொடவும் வேண்டாம் என்று சொன்னார்" (ஆதியாகமம் 3:2, 3) என்று கூறியதால், நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிப்பது தடைசெய்யப்பட்டிருந்தது என்பதை அவள் அறிந்திருந்தாள்.

ஆதியாகமத்தில் தேவன் அளித்துள்ள தகவலில் இருந்து, ஏவாள் தன்னைப் பாவம் செய்யும்படி சோதித்த கனியைக்குறித்துப் பின்வருபவற்றை கண்டாள் என்று நாம் அறிய முடியும்: (1) அது "புசிப்புக்கு நல்லதாக" இருந்தது, (2) அது "பார்வைக்கு இன்பமாக" இருந்தது, மற்றும் (3) அது "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதாக" இருந்தது (ஆதியாகமம் 3:6). அவள் "நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல்"

*இருப்பாள் என்று (ஆதியாகமம் 3:5ஆ) சர்ப்பம் கூறியிருந்தது. அவர்கள் அதை உண்டபின்பு, தேவன், "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" என்று கூறினார் (ஆதியாகமம் 3:22அ). எனவே வசனப்பகுதியைப் பொறுத்தமட்டில், ஒரே ஒரு முடிவு மாத்திரமே அடையப்படக்கூடும்: அவர்கள் அந்த கனியைப் புசிப்பதற்கு முன், நன்மை தீமை அறியக்கூடிய அறிவு இல்லாதவர்களாய் இருந்தனர். இது, அவர்கள் ஒழுக்கம்பற்றி ஒன்றும் அறியாதவர்களாய் இருந்தனர் மற்றும் அப்படிப்பட்ட விஷயங்களில் சோதிக்கப்படக்கூடாத வர்களாய் இருந்தனர் என்று அர்த்தப்படவேண்டும். அவர்கள் அதைப்புசித்த பின்பு, இனியும் அவர்கள் நன்மை தீமை பற்றி ஒன்றும் அறியாதவர்களாய் இருக்கவில்லை, ஆனால் தங்கள் சிந்தையின் ஒன்றுமறியாத் தன்மையை விட்டிருந்தனர். ஒழுக்கம் பற்றிய உணர்வு இல்லாதிருந்த அவர்களின் முன் நிலைமையில் இருந்து அவர்கள் வெளியேறி, ஒழுக்க அறிவு என்ற தேவனு டைய வட்டாரத்திற்குள் பிரவேசித்திருந்தனர்.*

*நன்மை தீமை அறியக்கூடிய மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசித்தபடியினால், அவர்கள் தங்களுடைய இயல்பை மோசம் போக்கிக்கொண்டிருந்தனர் என்ற முடிவு செல்லாததாக உள்ளது. அவர்கள் தீமையைப் பற்றிய அறிவை மட்டுமின்றி, நன்மையைப் பற்றிய அறிவையும் ஆதாயப்படுத்திக்கொண்டிருந்தனர். தீமையைப் பற்றிய அறிவு அவர்களைப் பொல்லாதவர்களாக்கக் கூடுமென்றால், நன்மையைப் பற்றிய அறிவு ஏன் அவர்களை நல்லவர்களாக்கவில்லை? விலக்கப்பட்ட கனியை உண்டதென்பது அவர்களின் இயல்பை மோசம்போக்கவில்லை, மாறாக, கீழ்ப்படியாமை என்ற அந்தச் செயலானது, தேவன் கொண்டுள்ள ஒழுக்கரீதியான சட்டதிட்டங்களை அவர்களுக்குத் திறந்து வைத்தது. விலக்கப்பட்ட கனியை அவர்கள் புசிக்குமுன்பு, அவர்கள் சிறுபிள்ளை களைப்போல், நன்மை தீமை பற்றிய அறிவு இல்லாதிருந்தனர், இவ்விதமாக அவர்கள் சிறுபிள்ளைகளின் ஒன்றுமறியாத உணர்வைக் கொண்டிருந்தனர் (உபாகமம் 1:39; ஏசாயா 7:16). தேவன், நன்மை தீமை பற்றிய தமது அறிவை நன்கு கையாளுகின்றார்; மனிதகுலமானது, தேவன் அறிவைக் கையாளும் அதே வகையில் கையாள இயலாது. இதனால் தான் தேவன், ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்று விரும்பினார் என்பது தெளிவு: அவர்கள் நன்மை செய்யத் தேர்ந்து கொள்வதிலும், தீமை செய்வதை மறுப்பதிலும் சிரமம் அடைவார்கள் என்பதைத் தேவன் அறிந்திருந்தார். அவர்கள், தேவனுடைய ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய சட்டமுறைமைக்கு எதிராகக் கலகம் செய்வதற்கு எளிதில் அவர்களை மாற்றக்கூடிய கனியைப் புசிப்பதில் அவர்கள் உற்சாகத்தைத் தடைசெய்யத் தேவன் ஒரு கடுமை யான தண்டனையை விதித்தார்.*

**தேவனால் தண்டனை**

*ஆதியாகமம் 3:9, 11ன் படி, தேவன் முதலில் ஆதாமிடம் பேசி,*

தமது சித்தத்தை மீறியது பற்றிக் கேள்வி கேட்டார். இது ஆதாம் ஏற்கனவே ஏவாளின் கணவர் என்ற நடத்துவத்தில் இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில், ஆதாம் மாபெரும் பொறுப்புடையவராகவும் ஏவாளைக்காட்டிலும் அதிகம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவராகவும் இருந்தார். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததைப்போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும், இதுவுமாயிற்று" என்று நாம் வாசிக்கின்றோம் (ரோமர் 5:12); "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:22). இருப்பினும், மீறுதலுடன் ஆதாம் கொண்டிருந்த உறவு, ஏவாள் கொண்டிருந்த உறவைப்போன்றதாகவே இருக்கவில்லை, ஏனெனில் 1 தீமோத்தேயு 2:14, "மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயான வளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" என்று கூறுகிறது.

கொடுக்கப்பட்ட தண்டனையானது, மீறுதலுக்கு முன்பு இருந்திராத நிலைமைகளை உருவாக்குவதாயிருந்தது. (1) மீறுதலுக்கு முன்பு, சர்ப்பம் தனது வயிற்றினால் நகர வேண்டியிருந்ததில்லை; அதன் பின்போ, சர்ப்ப மானது பூமியிலுள்ள சகல பிராணிகளிலும் அதிகமாய் சபிக்கப்பட்டு, தன் வயிற்றினால் நகரவும் தனது வாழ்நாள் முழுவதிலும் மண்ணை தின்னவும் வேண்டியதாயிற்று. (2) பெண், பிள்ளையைப் பெற்றெடுக்கும் போது மிகுந்த வேதனையடைவாள், மற்றும் ஆண் அவளை ஆண்டு கொள்வான். இதற்கு முன்பு பிள்ளைப்பிறப்பு என்பது ஓரளவு வேதனையற்றதாயிருந்திருக்க வேண்டும். ஆண் அவளை ஏற்கனவே ஆண்டுகொண்டிருந்தால், இது மீறுதலினிமித்தம் தேவன் அவளுக்குக் கொடுத்த தண்டனையாய் இருந்திராது. (3) ஆணுக்குத் தண்டனையாக, பூமி சபிக்கப்பட்டது (ஆதியாகமம் 3:17-19). மற்றும், அவன் எடுக்கப்பட்ட பூமிக்கே மறுபடியும் திரும்புவான். இவைகள் மீறுதலுக்கு முன்பு இருந்திராதவைகளும், தேவன் கொடுத்த தண்டனைகளுமாக இருக்க வேண்டும்.

தேவன், ஆதியில் இருந்தே ஆண் நடத்துவப் பொறுப்பைக் கொண்டிருக்கவேண்டும் என்று நோக்கங்கொண்டிருக்கலாம், ஆனால் நன்மை தீமை அறியத்தக்க மரத்தில் இருந்து ஆதாமும் ஏவாளும் புசிக்கும் வரையிலும், அறிவிக்கப்பட்டதான நடத்துவப் பணிப்பொறுப்பு ஒன்று இருந்ததில்லை (ஆதியாகமம் 3:16). "பணிப்பொறுப்பு" என்பது *mashal* என்ற எபிரெய வார்த்தையாகும், இது "ஆளுகை" என்றோ (ஆதியாகமம் 37:8; உபாகமம் 15:6) அல்லது "அதிகாரத்துவம்" என்றோ (யாத்திராகமம் 21:8) மொழிபெயர்க்கப்பட முடியும். உலகத்தின் வரலாறு முழுவதிலும், ஆண்கள் நடத்துவத்துவப் பணிப்பொறுப்பைக் கொண்டிருந்துள்ளனர். அவர்கள் மனிதகுலத்தின் பெரும்பாலான கலாச்சாரங்களின் விஷயங்களில் பெண்களைக் காட்டிலும் அதிகமாய் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்துள்ளனர்.

ஆதாம் மீதும் ஏவாள் மீதும் தேவன் வைத்த பிற தண்டனைகள் இன்னும்

நிலைநிற்கின்றன என்ற உண்மையானது, தண்டனையின் நிலைநிறுத்தமாக ஆண் இன்னமும் அவள்மீது ஆளுகை செய்ய வேண்டியுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கலாம். இந்தத் தண்டனையானது நிலைநிறுத்தப்படத் தேவையற்ற நிலை உள்ளது என்றால், அது ஒரு விதி விலக்காகவே உள்ளது. அதைத் தேவன் விலக்கியிருக்கவில்லை என்றால், அது நிலைத்துள்ளது. அவர் இன்னமும், கணவர்/மனைவி உறவிலும், மற்ற உறவுகளிலும் ஆணே ஆதிக்கம் செய்யும் பணிப்பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சித்தமாய் இருக்கின்றாரா?

இவ்விஷயத்தில் தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது, ஏனென்றால் புதிய ஏற்பாடு, ஏதேன் தோட்டத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையிலே பெண்களின் பணிப்பொறுப்புப் பற்றிய சத்தியங்களை மறைமுகமாகச் சுட்டிக்காண்பிக்கிறது மற்றும் போதிக்கிறது. ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்திற்கான தண்டனையைப் பற்றிய ஒரு தவறான புரிந்து கொள்ளுதலானது, வேதாகமத்தின் மற்ற வசனப்பகுதிகளைப் பற்றிய ஒரு தவறான புரிந்துகொள்ளுதலுக்கு வழிநடத்தலாம். நமது இலக்கானது, நம்முடைய முன் அனுமானங்களை உயர்த்திப்பிடிக்கும் போதனைகளைக் கண்ணோக்கக்கூடாது; எல்லாப் பகுதிகளிலும் நாம் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளுதலை நாடவேண்டும்.

ஒரு போதனையைப் புரிந்துகொள்வதற்கு, அது நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று காணுதல் சில வேளைகளில் அவசியமாகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின்பு, நடத்துவத்துவப்பொறுப்பை எடுத்துக்கொள்ளத் தொடங்கியது யார்? சமுதாயத்திலும், குடும்பத்திலும், மதவிஷயங்களிலும் தேவன் யாரை நடத்துனர்களாக அங்கீகரித்துள்ளார்? மோசேக்கு நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்படுவதற்கு முன்னும், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்ததாகவும், மற்றும் இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்கும் வரையிலும் பெண்களின் பணிப்பொறுப்பு என்னவாக இருந்தது?

## நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு பெண்கள்

ஆண்களுடைய பெயர்களின் அடிப்படையில் வம்சாவழி அட்டவணை தரப்பட்டதென்பது பெண்களுக்கு ஒரு அவமதிப்பாகும் என்று சிலர் நினைத்தாலும், நியாயப்பிரமாணத்திற்கு முன்பு வாழ்ந்திருந்த பெண்களை வேதாகமம் சிறுமைப்படுத்துவதில்லை. மகன்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்; ஆனால் மனைவிகளும் மகள்களும் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டாலும், வம்சவழி அட்டவணைகளில் ஆபிராம் மற்றும் நாகோர் ஆகியோரின் மனைவியர்களைப் பற்றிக் குறிப்பிடும் இடத்திற்கு (ஆதியாகமம் 11:29) நாம் வருகின்ற வரைக்கும், பெண்கள் பெயர்களைக் கொண்டு குறிப்பிடப்படுவதில்லை (ஆதியாகமம் 5:1-32;

*10:1-32; 11:10-28).*

*ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலினால் அவருடன் தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டார் (ஆதியாகமம் 22:16-18). இந்த உடன்படிக்கையானது சாராளினிமித்தமல்ல, ஆபிரகாமினிமித்த மாகவே அவரது பின்சந்ததியாருக்கு விரிவாக்கப்பட்டது (ஆதியா கமம் 18:19). ஏலியின் மனைவியல்ல ஆனால் ஏலிதான் அவரது மகன்களின் தீமையான வாழ்விற்குப் பொறுப்பைச் சுமக்கும்படியாக்கப்பட்டார் (1 சாமுவேல் 2:27-36; 3:13). இந்தக் காலகட்டத்தில் இருந்த ஆண்களுக்கு மாபெரும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன, ஆனால் அவர்கள் மாபெரும் கண்டிப்புடன் நியாயந்தீர்க்கப்பட்டும் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டும் இருந்தனர்.*

*ஆபிரகாம் சாராளுடனான தமது உறவில், நடத்துனராக இருந்திருக்க வேண்டும். தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, அவரை தம் தேசத்தை விட்டுப் புறப்படும்படி அறிவுறுத்தினார் (ஆதியாகமம் 12:1-3). தேவன் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அதை ஆண்களுக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய அடையாளமான விருத்தசேதனத்தினால் முத்திரையிட்டார் (ஆதியாகமம் 17). தேவன் இன்னொரு உடன்படிக்கையை ஆபிரகாமுடன் ஏற்படுத்திக்கொண்டு, அதை அவரது ஆண் வாரிசுகளாகிய ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரிடம் மறுபடியும் ஏற்படுத்தினார்; அவர்களை ஆசீர்வதித்துப் பெருமைப்படுத்துவதாகவும், அவர்களைப் பெரிய இனமாக்குவதாகவும், பூமியின் வம்சங்கள் யாவும் அவர்கள்மூலம் ஆசீர்வதிக்கப்படப் போவதாகவும், அவர்களுக்குக் கானான் நாட்டைக் கொடுப்பதாகவும் தேவன் வாக்குத்தத்தம் கொடுத்தார் (ஆதியாகமம் 12:1-3; 17:8; 22:18; 26:3-5; 28:13, 14).*

*பஞ்சகாலத்தில் இஸ்ரவேல் மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவன் யோசேப்பைப் பயன்படுத்தினார் (ஆதியாகமம் 50:20). சாராள், ரெபேக்காள், ராகேல் மற்றும் லேயாள் போன்ற பெண்மணிகள் முற்பிதாக்களின் காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் இருந்தனர்; ஆனால் தேவன் பெண்களையல்ல ஆண்களைத்தான் குடும்பங்களின் பிரதிநிதிகளாகக் கையாண்டார். பன்னிரெண்டு கோத்திரங்கள், யாக்கோபுவின் மகள் தீனாளுடைய அல்லது அவளது சந்ததிகளுடைய பெயர்களால் அல்ல, மகன்களுடைய பெயர்களாலேயே அமைந்தன. செங்கோல் கோத்திரத்தை விட்டு நீங்காதிருக்கும் என்று யூதா என்ற ஆணுக்கே வாக்குத்தத்தம் ஏற்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 49:10).*

*எகிப்திய அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்களை வெளியே அழைத்து வந்து நடத்துவதற்கும், இஸ்ரவேல் மக்களை வனாந்திரத்தில் நடத்திச் செல்வதற்கும், தேவன் மோசேயையும் ஆரோனையும் தேர்ந்து கொண்டார் (யாத்திராகமம் 7:1, 2). அவர் மோசேயின் மூலமாகவே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார் (யோவான் 1:17). மிரியாம், பார்வோனின் குமாரத்தி, மோசேயின் மனைவி சிப்போராள் ஆகியோருக்குத் தேவன் முக்கியத்துவம் வாய்ந்த பணிப்பொறுப்புகளைக்*

கொடுத்திருந்தார்; இருப்பினும் அவர் மோசே, ஆரோன், யோசுவா (யாத்திராகமம் 17:9), காலேப் (எண்ணாகமம் 14:24), எழுபது மூப்பர்கள் (யாத்திராகமம் 24:1; எண்ணாகமம் 11:16, 25), மற்றும் பிற ஆண்களுக்குக் கொடுத்திருந்தது போல் நடத்துவத்துவப் பதவிகளைப் பெண்களுக்கு நியமிக்கவில்லை. எல்தாத் மேதாத் போன்ற ஆண்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர் (எண்ணாகமம் 11:26). வேதாகமத்தில் எழுதப்பட்டவைகள் ஆண்களுக்கு அருளப்பட்ட வெளிப்படுத்துதல்களாகவே உள்ளன. மிரியாம் மற்றும் உல்தாள் என்ற இரு பெண்களால் மாத்திரமே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது, மற்றும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடத்தக்கவைகளாக இருப்பதில்லை.

மிரியாம் ஒரு தீர்க்கதரிசியானவள் என்று அழைக்கப்பட்டிருந்தாலும் (யாத்திராகமம் 15:20அ), பதியப்பட்டுள்ள அவளது கூற்றானது, செங்கடலைக் கடந்தபின்பு பெண்களைச் சந்தோஷத்துடன் வழிநடத்துவதற்காகக் கூறப்பட்டவையாகவே இருந்தன (யாத்திராகமம் 15:20ஆ, 21). அவள் ஆண்களை வழிநடத்தியதாகப் பதிவு எதையும் நாம் பெற்றிருப்பதில்லை. உல்தாள் என்பவள் தனிப்பட்ட முறையில் தன்னிடம் வந்த ஆண்களுக்கு [மாத்திரம்] தீர்க்கதரிசனம் உரைத்தாள் (2 இராஜாக்கள் 22:14-20). இந்தக் காலகட்டம் முழுவதிலும் தேவன் நடத்துவத்துவப் பொறுப்புக்களை இஸ்ரவேலின் ஆண்களுக்கு மாத்திரம் ஒப்புவித்தார்.

## நியாயப்பிரமாணத்தின்கீழ் பெண்கள்

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஆண்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த செயல்நிர்வாகப் பணிப்பொறுப்பு பற்றி நாம் தொடர்ந்து காண்போம்.

### நியாயாதிபதிகளின் நாட்களில்

நியாயாதிபதிகளின் நாட்களின்போது, தெபொராள் தவிர மற்ற தேசீய நடத்துனர்கள் யாவரும் ஆண்களாகவே இருந்தனர். அவள் ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தாள் மற்றும் பெண்களின் நடத்துவத்திற்கு ஒரு உதாரணமாகவும் இருக்கின்றாள். அவள் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயாதிபதியாகவும் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தாள் என்பதில் சந்தேகம் எதையும் வேதாகமம் விட்டுச்செல்வதில்லை (நியாயாதிபதிகள் 4:4, 5). இருப்பினும் அவள் கர்த்தருடைய சபையின் மதரீதியான விஷயங்களில் மக்களை நடத்திச் சென்றது இல்லை என்று நாம் முடிவுசெய்ய இயலும். இந்தப்பொறுப்பை நியாயப்பிரமாணமானது லேவிகோத்திரத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு மாத்திரம் கொடுத்திருந்தது (எண்ணாகமம் 1:50; 3:9, 10).

தெபொராளினிமித்தம் எழுகின்ற கேள்விகளுக்கு வேதாகமத்தில் பதில் அளிக்கப்படுவதில்லை. இந்த அலுவலுக்கு அவளை மக்கள் நியமித்தனரா? நியாயாதிபதிகள் தேவனுடைய முழு ஆசீர்வாதத்துடன் நியமிக்கப்பட்டனரா? அல்லது தேவன் இஸ்ரவேலின் இராஜாக்களை அனு மதித்ததுபோலவே அவர் நியாயாதிபதிகளையும் அனுமதித்திருந்தாரா

*(ஓசியா 13:11)? தெபொராள், இஸ்ரவேல் ஆண்கள் யாரும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றவில்லை என்பதற்காக இந்தப் பணிப்பொறுப்பை எடுத்துக்கொண்டாளா? இஸ்ரவேல் நாட்டின் வரலாற்றின் பிற்பகுதியில் இருந்ததுபோன்ற ஒரு சீரழிந்த நிலை அக்காலத்தில் நிலவியிருந்ததால் தேவன் தெபொராளை நியாயாதிபதியாக நியமித்தாரா? இஸ்ரவேல் மக்களைப் பற்றி தேவன், "பிள்ளைகள் என் ஜனங்களை ஒடுக்குகிறவர்களாயிருக்கிறார்கள்; ஸ்திரீகள் அவர்களை ஆளுகிறார்கள்" என்று கூறினார் (ஏசாயா 3:12).*

*தெபொராள் தனது தீர்க்கதரிசனங்களை ஏற்படுத்திய காட்சியமைவு பற்றி ஒன்றும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதில்லை. அவள் தேவனுடைய மக்களின் சபைக்கு உரையாற்றினாளா அல்லது அவள் தனிப்பட்ட சிறு குழுக்களுக்கு மாத்திரம் பேசினாளா? அவள் ஆண்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறினாளா, அல்லது பெண்களுக்கு மாத்திரம் அதைக் கூறினாளா? அவள் மற்றவர்களால் வாசிக்கப்படும்படி தனது தீர்க்கதரிசனங்களை எழுதிவைத்திருந்தாளா, அல்லது அவள் தனது தீர்க்கதரிசனங்களைக் குழுக்களுக்கு அல்லது தனிநபர்களுக்கு உரைத்தாளா? அவள் மதவிஷயங்களைப் பற்றியா அல்லது நாட்டு விஷயங்களைப் பற்றியா, எதைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தாள்? நமக்குத் தெரியாது. இந்தக் காரணத்தினாலேயே, நாம் தெபொராள் ஒரு நியாயாதிபதியாகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்தாள் என்பதன் அடிப்படையில் மாத்திரம், பெண்ணின் பணிப்பொறுப்பைப் பற்றிய கண்ணோக்கைக் கட்டியெழுப்புவதில் கவனமாய் இருக்க வேண்டும். தேவன் இராஜாக்களை அனுமதித்திருந்தது போன்றே, இவள் ஒரு நியாயாதிபதியாக இருப்பதை அநியாயமான கட்டாயத்தின்பேரில் அனுமதித்து இருந்திருக்கலாம். தீர்க்கதரிசி என்ற வகையில், அவள் ஒரு பொதுகூட்டத்திலோ அல்லது தேவனுடைய மக்களின் மதரீதியான சபைகூட்டத்திலோ ஒருக்காலும் உரையாற்றாமல் இருந்திருக்கலாம்.*

*இந்தக் காலகட்டத்தின்போது மற்ற மாபெரும் பெண்களும் வாழ்ந்திருந்தனர்: ராகாப், சிம்சோனின் தாய், நகோமி, ரூத் மற்றும் அன்னாள். தெபொராள் என்ற விதிவிலக்குத் தவிர, இந்தப் பெண்களில் எவரும் நடத்துவத்துவப் பணிப்பொறுப்பைக் கொண்டிருந்ததில்லை, அல்லது இவர்கள் யோசுவாவைப் போல் தங்கள் குடும்பங்களுக்காகப் பேசினர் என்று வேதவசனங்கள் பதிவுசெய்திருப்பதும் இல்லை (யோசுவா 24:15). இஸ்ரவேலின் மிகச்சீர்கேடான காலகட்டத்தில் கூட, ஆசாரியர்களாய் இருக்கத் தகுதியற்றிருந்த ஆண்கள் மதரீதியான நடத்துவத்துவப்பொறுப்பைக் கொண்டிருந்தனர், அப்படிப்பட்ட பணிப் பொறுப்புக்களைப் பெண்கள் ஏற்று நடத்தியதாகச் செய்தி எதுவும் பதியப்பட்டிருப்பதில்லை.*

### *இராஜாக்களின் நாட்களில்*

*தேவன் ஆண்களை மாத்திரம் இஸ்ரவேலின் இராஜாக்களாக நியமித்த உண்மை பற்றிய தனிமுக்கியத்துவம் முழுமையையும் நாம் புரிந்துகொள்ள*

இயலாது போகலாம். தாவீதின் கீழ் இஸ்ரவேல் நாட்டில் இராணுவம், மதரீதியான விஷயம் மற்றும் குடிமைத் தலைமை ஆகியவற்றில் பணியாற்றியதாகப் பட்டியலிடப்பட்ட யாவரும் ஆண்களாகவே இருந்தனர் (1 நாளாகமம் 23-27). சில விஷயங்களில் தேவனே தேர்ந்தெடுத்தல்களை மேற்கொண்டார் என்ற விதிவிலக்குத் தவிர, இதை நாம் முற்றிலுமாகக் கலாச்சாரத்தினுடைய தாக்கமாகவே குறிப்பிடலாம். தேவனுடைய நோக்கத்தின்படியானதென்று இருந்திருந்தால், அவர் நடத்துவத்துவப் பணிப்பொறுப்புக்களுக்குப் பெண்களை நியமித்திருக்கக் கூடும் அல்லது அவ்வாறு செய்யும்படி தீர்க்கதரிசியாய் இருந்த தாவீதின்மூலம் அறிவுறுத்தியிருக்கக்கூடும். தேவன், மற்ற எல்லா ஆட்சியாளர்களைக் காட்டிலும் அதிக ஞானியாக்கிய சாலொமோன் கூட, தமது அரசாங்கத்தில் ஆண்களை மாத்திரமே நடத்துனர்களாகப் பயன்படுத்தினார் (1 இராஜாக்கள் 4:1-19).

அரசாங்கத்தில் அதிகாரத்துவத்தை எடுத்துக்கொண்ட பொல்லாத பெண்களைப்பற்றி நாம் வாசிக்கின்றோம். ஆகாப் இராஜா என்பவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை அபகரித்துக் கொள்வதற்காக நாபோத்தின் மரணத்தை ஏற்பாடு செய்வதற்கு, ஆகாப் இராஜாவின் முத்திரையை யேசபேல் என்பவள் பயன்படுத்தினாள் (1 இராஜாக்கள் 21:7-10). அத்தாலியாள் என்பவள் தனது மகன் அகசியா இறந்தபின்பு, அவனுக்குப்பின் அரியணையில் அமர வாய்ப்புக்கொண்டிருந்த யாவரையும் கொன்றுபோட்டு, அரசை அபகரித்துக்கொண்டாள் (2 இராஜாக்கள் 11:1-3).

## முடிவுரை

பழைய ஏற்பாட்டில் பல பெண்கள் மாபெரும் புத்திக்கூர்மையையும், ஞானத்தையும், ஒழுக்கநெறியையும் மற்றும் தைரியத்தையும் காண்பித்தனர் - சில நிகழ்ச்சிகளில், அவர்கள் ஆண்களைவிட மேலானவர்களாகவும் இருந்தனர். திறமையில் அவர்கள் எந்தவகையிலும் ஆண்களுக்குத் தாழ்ந்தவர்களாய் இருந்ததில்லை. மதம்சார்ந்த சமூகத்திலும் நாட்டு அரசாங்கத்திலும் அவர்களுக்கு நடத்துவத்துவம் கொடுக்கப்படாதிருக்கையிலும், அவர்கள் தங்களின் ஞானமான செயல்கள் மற்றும் தாழ்மையான பணிகள் ஆகியவற்றின்மூலம் மகாப்பெரிய நிலைக்கு எழும்பினார்கள்.

---

## நியாயப்பிரமாணத்தில் பெண்களைக் குறித்துத் தக்க ஏற்பாடுகள்

தேவன் மோசேயை, இரு குழுக்களில் ஆண்களை எண்ணும்படிப் பணித்தார்: இராணுவத்தில் பணியாற்றக் கூடியவர்கள் (எண்ணாகமம் 1:1-3) மற்றும் மதவிஷயங்களில் பணியாற்றக்கூடியவர்கள் (எண்ணாகமம் 1:20-50; 3:5-10, 14, 15). இராணுவச் சேவைக்கோ அல்லது ஆசாரியத்துவ ஊழியத்திற்கோ பெண்கள் நியமிக்கப்படவில்லை. தேவன் மோசேயை,

முதலாவதாகப் பிறந்த பெண்குழந்தைகளையல்ல, ஆனால் ஆண் குழந்தைகளையே, தமக்குரியவர்கள் என்ற வகையில் எண்ணும்படிக் கூறினார் (எண்ணாகமம் 3:40, 45; யாத்திராகமம் 13:12; 22:29).

இஸ்ரவேலில் இருந்த ஒவ்வொரு ஆணும், வருடத்தில் மூன்றுமுறை கர்த்தருக்கு முன்பாக வரவேண்டி இருந்தது (யாத்திராகமம் 23:17). ஆசாரியக் கோத்திரத்தில் இருந்த ஆண்கள் காணிக்கையாக வந்த அப்பங்களை உண்ண அனுமதிக்கப்பட்டிருந்தனர் (லேவியராகமம் 6:18, 29; 7:6).

ஒரு பெண், பெண்குழந்தையைப் பெற்றெடுத்தால் சுத்திகரிப்பதற்கு, அவள் ஆண்குழந்தையைப் பெற்றபோது மேற்கொள்ளப்படும் சுத்திகரிப்பு நாட்களைவிட அதிக நாட்கள் கேட்டுக்கொள்ளப்பட்டது (லேவியராகமம் 12:1-8). யுத்தத்தில் பிடிக்கப்பட்டவர்களில் கன்னிப்பெண்கள் தவிர மற்ற ஆண் பெண் ஒவ்வொருவரும் கொலைசெய்யப்பட வேண்டியிருந்தது (எண்ணாகமம் 31:17, 18).

மகன்களே குடும்ப சுதந்திரவீதத்தைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருந்தனர், மற்றும் முதலாவதாகப் பிறந்த மகன் இருமடங்கு வீதத்தைப் பெற்றுக்கொள்பவனாக இருந்தான் (உபாகமம் 21:16, 17). குடும்பப் பெயரும் சுதந்திரவீதமும் ஆண்மூலமாக உயிருடன் காக்கப்பட வேண்டியவையாய் இருந்தன. கணவர் மரித்துப்போனால், இறந்துபோனவரின் குடும்பத்தையும் பெயரையும் கட்டுவதற்காக அவரது மனைவி, அவரது சகோதரர் மூலமாகப் பிள்ளையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது (உபாகமம் 25:5-10). (ஆனால்) பிள்ளையில்லாமல் இறந்து போகும் ஒரு மனைவிக்காக அவளது கணவர், வீட்டைக் கட்டும்படி கூறப்படவில்லை. ஆண்கள் பல மனைவியர்களைக் கொண்டிருந்தனர், ஆனால் பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களைக் கொண்டிருந் ததாகச் செய்தியில்லை.

ஆணின் உடையைப் பெண் தரித்துக்கொள்வதோ அல்லது பெண்ணின் உடையை ஆண் தரித்துக்கொள்வதோ தேவனுக்கு “அருவருப்பாக” இருந்தது ஏன் என்பது பற்றி நமக்கு உறுதியாகத் தெரியாமல் இருக்கலாம் (உபாகமம் 22:5). ஒருவேளை இது, தேவன் அவர்களை மாறுபட்ட வகையில் படைத்தார் என்பதற்காகவும், அவர்கள் தங்கள் மாறுபட்ட பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்படி அவர் விரும்பினார் என்பதற்காகவும், எதிர்பாலினத்தவர் போலத் தோற்றம் அளிப்பதைத் தவிர்ப்பதற்காகவும் எதிர்பாலினத்தவரின் பொறுப்பை எடுத்துக்கொள்ளாமலிருப்பதற்காகவும் உண்மையாய் இருந்திருக்கலாம். பெண் தன்மைகொண்ட ஆண் (effeminate) புதிய ஏற்பாட்டில் கண்டனம் பண்ணப்படுதலென்பது (1 கொரிந்தியர் 6:9), பெண்களைப்போலத் தோற்றம் அளிக்கின்ற ஆண்களும், ஆண்களைப்போலத்தோற்றம் அளிக்கின்ற பெண்களும், தேவனுக்கு இன்னும் அருவருப்பானவர்களாகவே இருக்கின்றனர் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோரின் தலைமுடியின் நீளங்களுக்கு இடையில் வித்தியாசம் இருக்க வேண்டும். பெண்ணானவள் தனது நீண்ட தலைமுடியால்

கனப்படுத்தப்படும்படியும், ஆண் நீண்ட தலைமுடி கொண்டிருந்தால் அவன் கனவீனப்படுத்தப்படும்படியும் தேவன் அவர்களைப் படைத்தார் (1 கொரிந்தியர் 11:14, 15). ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவன் மாறுபட்டுள்ள பணிப்பொறுப்புக்களை நோக்கங்கொண்டுள்ளார் என்பது அவர்கள் தங்களையே முன்னிறுத்துகின்ற வழிமுறையில் காணப்படக்கூடும்.

நியாயப்பிரமாணத்தின்படி, ஆண் ஏற்படுத்தும் பொருத்தனையானது ஐம்பது வெள்ளி சேக்கல்கள் மதிப்புடையதாயிருக்கையில், இருபது முதல் அறுபது வயது வரையுள்ள பெண் ஏற்படுத்தும் பொருத்தனையானது முப்பது சேக்கல்கள் மதிப்புடையதாயிருந்தது (லேவியராகமம் 27:1-7).[1] ஏழைகளாய் இருப்பவர்கள் ஆசாரியரின் முடிவுப்படி மதிப்பிடப்பட வேண்டியவர்களாய் இருந்தனர் (லேவியராகமம் 27:8). இது, அந்தத் தனிநபரின் மதிப்பைக் காட்டிலும் அவர் செலுத்தக்கூடிய தகுதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஊதியம் ஈட்டுபவர்கள் என்ற வகையில், பெண்களைக் காட்டிலும் ஆண்கள் நிதிநிலையில் அதிகம் செலுத்தக் கூடியவர்களாய் இருந்தனர்.

ஆண்கள் எப்போதுமே தங்கள் பொருத்தனைகளால் கட்டுப் படுத்தப்பட்டவர்களாய் இருந்தனர். ஒரு தகப்பனோ அல்லது ஒரு கணவரோ தனது மகளோ அல்லது தனது மனைவியோ, ஏற்படுத்தியிருந்த பொருத்தனையைத் தடைசெய்தால், அவளது பொருத்தனை அவளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கவில்லை. ஆண்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பெண்களின் பொருத்தனைகளை உறுதிப்படுத்த அல்லது நிராகரிக்க உரிமை கொண்டிருந்தனர் (எண்ணாகமம் 30:1-15). ஆனால், ஆண்கள் ஏற்படுத்திய பொருத்தனைகளைப் பாதிக்கக்கூடிய வகையில் பெண்களுக்கு இவ்வித உரிமை எதுவும் தரப்படவில்லை. மீண்டும், இது குடும்பத்தில் ஆணின் தலைமைத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது.

---

குறிப்பு

[1]ஐந்து முதல் இருபது வயது வரையுள்ள ஆணுக்கு இருபது சேக்கலும் அதே வயதுடைய பெண்ணுக்கு பத்து சேக்கலும் மதிப்பிடப்பட்டது; ஒரு மாதம் முதல் ஐந்து வயது வரையுள்ள ஆணுக்கு ஐந்து சேக்கலும் அதே வயதுடைய பெண்ணுக்கு மூன்று சேக்கலும் மதிப்பிடப்பட்டது; அறுபதுக்கு மேலான வயதுடைய ஆணுக்குப் பதினைந்து சேக்கலும் அதே வயதுடைய பெண்ணுக்குப் பத்து சேக்கலும் மதிப்பிடப்பட்டது.

---

## வேதாகமத்தில் தீர்க்கதரிசினிகள்

வேதாகமம் ஐந்து பெண்களைத் தீர்க்கதரிசினிகள் என்று குறிப்பிடுகிறது: இவர்கள், உல்தாள் (2 இராஜாக்கள் 22:14; 2 நாளாகமம் 34:22) மற்றும் அன்னாள் (லூக்கா 2:36) என்ற உண்மைத்

தீர்க்கதரிசினிகள் இருவரும், நொவதியா (நெகேமியா 6:14) மற்றும் இறைவெளிப்பாட்டில் உள்ள யேசபேல் (வெளிப்படுத்தின விசேஷம் 2:20) என்ற பொய்த்தீர்க்கதரிசினிகள் இருவரும் ஆவர். ஏசாயாவின் மனைவி தீர்க்கதரிசியானவள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றாள், ஆனால் அவளது பெயர் குறிப்பிடப்படவில்லை (ஏசாயா 8:3), அல்லது சபையின் தொடக்க நாட்களின்போது பிலிப்புவின் மகள்கள் நான்கு பேர் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தனர், அவர்களின் பெயர்களும் குறிப்பிடப்படவில்லை (நடபடிகள் 21:9).

உல்தாள், இராஜாவின் பிரதிநிதிகளுடன் தனிப்பட்ட ஆலோசனை நடத்தினாள் (2 இராஜாக்கள் 22:14-20; 2 நாளாகமம் 34:22-28). அவள் ஆவிக்குரிய விஷயங்களில் மற்றவர்களை நடத்திச் சென்றாள் என்றோ அல்லது தேவனுடைய மக்களின் சபைக்குமுன்பாக உரையாற்றினாள் என்றோ குறிப்பெதுவும் இல்லை.

அன்னாள் என்பவள் தேவாலயத்தில் தரித்திருந்தாள். அவள் குழந்தையாயிருந்த இயேசுவைக் கண்ட பின்பு, "எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்" (லூக்கா 2:38ஆ). அவளது தீர்க்கதரிசனங்களின் அளவு, தேவாலயத்தில் அவள் எங்கிருந்தாள், அல்லது அவள் தனிநபர்களுக்கா அல்லது மக்களின் பெருந்திரள்கூட்டங்களுக்கா, யாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தாள் என்பவற்றைப்பற்றி நமக்குக் கூறப்படுவதில்லை. பெண்கள், தேவாலயத்தில் பெண்களின் முற்றத்திற்குச் செல்ல முடிந்திருந்தது, ஆனால் அவர்கள் அதைத்தாண்டி உள்ளே செல்லக்கூடாதிருந்தது, அங்கு சடங்காச் சாரரீதியாகத் தங்களைச் சுத்திகரித்துக்கொண்ட ஆண்கள் மாத்திரமே செல்ல முடிந்தது. அன்னாள் தொடர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்தாள் என்று நாம் யூகிக்கலாம், ஆனாலும் அவளது தீர்க்கதரிசனங்கள், அவளைக் கடந்து சென்றவர்களுக்கு மேசியாவின் பிறப்பைப் பற்றிய கூற்றுக்களைவிட அதிகமானவைகளாய் இருந்தன என்று நம்மால் நிரூபிக்க இயலாது. தேவாலய ஆராதனை ஊழியத்தின் ஒரு பாகமாக, முறைப்படி கூடிவந்த சபைக்கு அவள் தீர்க்கதரிசனம் உரைத்தாள் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவும் அடங்கியிருப்பதில்லை.

ஏசாயாவின் மனைவி என்ன செய்தாள் என்பதைப் பற்றி நாம் புரிந்துகொள்ள உதவும்படிக்கு, போதுமான தகவல் எதுவும் தரப்பட வில்லை. அவள் ஒரு தீர்க்கதரிசியின் மனைவியாய் இருந்ததால் மாத்திரமே, தீர்க்கதரிசியானவள் என்று அழைக்கப்பட்டிருக்கக்கூடும் அல்லது அவள் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கக்கூடும். அவள் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தால், எதை, எங்கு, எப்போது அல்லது யாருக்கு உரைத்தாள் என்பது பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. பிலிப்புவின் மகள்களாயிருந்த நான்கு கன்னிப்பெண்களின் விஷயத்திற்கும் இதுவே உண்மை யாயிருக்கிறது.

உல்தாள் (2 இராஜாக்கள் 22:14-22) மற்றும் மிரியாம் (யாத்திராகமம் 15:20-21) ஆகிய இருவரால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் மாத்திரமே வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த தீர்க்க

தரிசனங்கள், ஆண்களும் பெண்களும் கொண்ட சபையின் கூட்டத்தில் கூறப்படவில்லை. தீர்க்கதரிசினி ஒருத்தி எழுதிய தீர்க்கதரிசன வார்த்தை பற்றிய பதிவு எதுவும் நமக்கில்லை. பழைய ஏற்பாட்டிலோ அல்லது புதிய ஏற்பாட்டிலோ, தேவனுடைய மக்களின் முறையான, மதரீதியான பொதுக்கூட்டங்களில் பெண் ஒருத்தி உரையாற்றினாள் என்பதற்கு, வேதாகமத்தில் வாதிட இயலாத கூற்றெதுவும் இல்லை. தேவன், அவரது மக்களின் சபைகூட்டங்களில் உரையாற்றுவதற்கும் பரிசுத்த வேத வசனங்களை எழுதுவதற்கும் ஆண்களையே பயன்படுத்தினார்.